# வவுனியாவில் புலிகள் அதிரடி; 5 இராணுவம் பலி

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 25 இதழ் 87
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 8-5-1994

## ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)
வவுனியாப் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை மேற்கொண்ட திடீர் தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர். [illegible] படுகாயமடைந்தனர். பெருமளவு இராணுவ தளபாடங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.
நேற்றுக் காலை 6.10 மணியளவில் [illegible]
(2 ம் பக்கம் பார்க்க)

★ மன்னாரில் புலிகள் அதிரடி

## பொலிஸ் நிலையம் தகர்ப்பில் இருவர் உயிரிழப்பு

(மன்னார்)
மன்னார் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பொலிஸ்நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட தாக்குதலில் இரு பொலிஸார் கொல்லப்பட்டனர். 5 பொலி[illegible]
(6-ம் பக்கம் பார்க்க)

★ அரசியல் விடுதலை என்ற குறிக்கோளுடன்

# தமிழீழ தனியரசு நிறுவுவதற்கு

# சுய பொருளாதாரம் தேவை

## தலைவர் பிரபா ஆசிச் செய்தி!

(யாழ்ப்பாணம்)

"எமது தன்னாட்சி உரிமைப் போராட்டம் தமிழீழ தனியரசை நிறுவும் இலட்சியத்தைக் கொண்டது. இந்தத் தனியரசை நிர்மாணிப்பதற்கு ஒரு தன்னிறைவான பொருண்மியக் கட்டமைப்பு அவசியம். எனவேதான் அரசியல் விடுதலை என்ற எமது குறிக்கோளுடன் பொருளாதார விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கிறது. நாம் நிர்மாணிக்கப்போகும் நாடு தங்குநிலையற்றதாக தன் காலில் தரித்துநின்று வளர்ச்சி பெறக்கூடியதாக அமையப்பெறவேண்டும். அதற்கான அத்திவாரத்தை நாம் இப்பொழுதிலிருந்தே கட்டியெழுப்ப வேண்டும்"

இவ்வாறு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ('வேளாண் மன்னர்') [illegible] ஆசிச் செய்தியில் குறிப்பிட்டார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கையில்; [illegible] எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் [illegible] நாம் பெரும் நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர் [illegible]
(2-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மாணவனுக்கு சுவிஸில் அரசியல் தஞ்சம்

(கொழும்பு)
வவுனியா செட்டிகுளத்தைச் சேர்ந்த அன்ரன் யூட் அருள்ராஜ் (வயது 25) என்பவருக்கு சுவிஸ் அரசு அரசியல் தஞ்சம் வழங்கியுள்ளது. புலிகளின் ஆதரவாளர் எனக்கூறி கடந்த 3 வருடங்களுக்கு முன் கொழும்பில் [illegible]
(6-ம் பக்கம் பார்க்க)

## சகலரும் இணைந்தால் ஐ.தே. கவுக்கு வெற்றியாம்

(கொழும்பு)
காமினி திசநாயக்கா எல்லோரும் கட்சியில் இணைந்து முழுமையாக செயற்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பல நன்மைகள் கிட்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய செயலாளர் காமினி விஜேசேகர [illegible] அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.
(6-ம் பக்கம் பார்க்க)

காணாமல் போனோர் பற்றி

## சுதந்திர விசாரணை நடத்தக் கோரிக்கை

(பாரிஸ்)
வடக்கு-கிழக்கில் நடைபெற்ற பெரும்போரில் காணாமல் போன ஆயிரக்கணக்கான தமிழர்கள் குறித்து இலங்கை அரசு சுதந்திரமான விசாரணை நடாத்தி சம்பந்தப்பட்டவர் [illegible] தண்டிக்க வேண்டும். அத்துடன் காணாமல் போனவர்களின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும். இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபையின் பிரான்ஸ் [illegible]
(6ம் பக்கம் பார்க்க)

## இல. படையினர் சூடு 2 தமிழக மீனவர் பலி

(சென்னை)
இலங்கைக் கடற்படையினர் கடந்த வியாழக்கிழமை இராமேஸ்வரத்திற்கு அப்பால் ஆழ்கடல் பகுதியில் வைத்து மேற்கொண்ட சூட்டுத் தாக்குதலில் இரு இந்திய மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஒருவர் படுகாயமடைந்தார்.
இந்திய மீனவர்களின் படகுகள் மூழ்கடிக்கப்பட்டபின் இவர்கள் இருவரும் சுட்டுக் [illegible]
(6-ம் பக்கம் பார்க்க)



மன்னார் மாவட்ட வேளாண் மன்னரான திரு. சகாயராசா பெரேராவிற்கு தலைவர் பிரபாகரன் வேளாண் மன்னர் விருதை அணிவிப்பதை படத்தில் காணலாம்

## தலைவரினால் ஆறு உழவர்கள் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவம்

(யாழ்ப்பாணம்)
வடதமிழீழப் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்திய "வேளாண் மன்னர்" போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட ஆறு வேளாண் மன்னர்களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்றுமுன்தினம் தங்கப் பதக்கம், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவித்தார்.
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஒழுங்கு செய்திருந்த இந்நிகழ்ச்சிக்கு அதன் பொறுப்பாளர் திரு செம்பியன் தலைமைதாங்கினார்.
தமிழீழத்தில் சுயசார்புப் பொருளாதாரத்தைக் [illegible]
(2-ம் பக்கம் பார்க்க)

மே 12ல்

## மீனவர் கொலையைகண்டித்து தி. மு. க. ஆர்ப்பாட்டம்

(சென்னை)
இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் தமிழக மீனவரை படுகொலை செய்வதைக் கண்டித்து எதிர் வரும் 12ம் திகதி தமிழகம் முழுவதிலும் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தப் போவதாக தி. மு. க. அறிவித்துள்ளது.
இந்திய மத்திய அரசு உடனடியாக தலையிட்டு தமிழக மீனவர் கொல்லப்படுவதைத் [illegible]
(4-ம் பக்கம் பார்க்க)

